# ஜனவரி – 10 – புதன்

தூய வில்லியம்

எனவே, இதோ வருகின்றேன்:” என்னைக் குறித்துத் திருநூல் சுருளில் எழுதப்பட்டுள்ளது: திபா. 40:7

-------------------------------------------------------------------

## முதல் வாசகம் : 1 சாமுவேல் 3 : 1 – 10, 19 – 20

சிறுவன் சாமுவேல் ஏலியின் மேற்பார்வையில் ஆண்டவருக்கு ஊழியம் செய்துவந்தான். அந்நாள்களில் ஆண்டவரின் வார்த்தை அரிதாக இருந்தது. காட்சியும் அவ்வளவாக இல்லை. அப்போது ஒரு நாள் ஏலி தம் உறைவிடத்தில் படுத்திருந்தார். கண் பார்வை மங்கிவிட்டதால் அவரால் பார்க்க முடியவில்லை. கடவுளின் விளக்கு இன்னும் அணையவில்லை. கடவுளின் பேழை வைக்கப் பட்டிருந்த ஆண்டவரின் இல்லத்தில் சாமுவேல் படுத்திருந்தார். அப்போது ஆண்டவர், ”சாமுவேல்” என்று அழைத்தார். அதற்கு அவன், ”இதோ! அடியேன் என்று சொல்லி, ஏலியிடம் ஓடி, இதோ! அடியேன் என்னை அழைத்தீர்களா? என்று கேட்டான். அதற்கு அவர், ”நான் அழைக்கவில்லை. திரும்பிச் சென்று படுத்துக்கொள் என்றார். அவனும் சென்றுபடுத்துக் கொண்டான். ஆண்டவர் மீண்டும் ”சாமுவேல்” என்று அழைக்க, அவன் ஏலியிடம் சென்று, இதோ அடியேன். என்னை அழைத்தீர்களா? என்று கேட்டான். அவரோ, நான் அழைக்க வில்லை மகனே! சென்று படுத்துக்கொள்” என்றார். சாமுவேல் ஆண்டவரை இன்னும் அறியவில்லை. அவனுக்கு ஆண்டவரின் வார்த்தை இன்னும் வெளிப்படுத்தப்படவில்லை. மூன்றாம் முறையாக ஆண்டவர் ”சாமுவேல்” என்று அழைத்தார். அவன் எழுந்து ஏலியிடம் சென்று” இதோ அடியேன். என்னை அழைத்தீர்களா? என்று கேட்டான். அப்பொழுது சிறுவனை ஆண்டவர்தாம் அழைத்தார் என்று ஏலி தெரிந்துகொண்டார். பின்பு ஏலி சாமுவேலை நோக்கி சென்று படுத்துக்கொள். உன்னை அவர் மீண்டும் அழைத்தால் அதற்கு நீ ”ஆண்டவரே பேசும் உம் அடியான் கேட்கிறேன்” என்று பதில் சொல்” என்றார். சாமுவேலும் தம் இடத்திற்குச் சென்று படுத்துக் கொண்டான். அப்போது ஆண்டவர் வந்து நின்று, ”சாமுவேல்” சாமுவேல்” என்று முன்பு போல் அழைத்தார். அதற்கு சாமுவேல், ”பேசும், உம் அடியேன் கேட்கிறேன்” என்று மறு மொழி கூறினான். சாமுவேல் வளர்ந்தான் ஆண்டவர் அவனோடு இருந்தார் சாமுவேலது வார்த்தை எதையும் அவர் தரையில் விழவிடவில்லை. சாமுவேல் ஆண்டவரின் இறைவாக்கினராக நியமிக்கப்பட்டு விட்டார் என்று தாண் முதல் பெயேர்செபா வரையிலும் அனைத்து இஸ்ரயேலரும் அறிந்து கொண்டனர்.

**பதில்பாடல் :** உம் திருவுளம் நிறைவேற்ற இதோ வருகிறேன் ஆண்டவரே

## நற்செய்தி : மாற்கு 1 : 29 - 39

இயேசுவும் சீடர்களும் தொழுகைக் கூடத்தை விட்டு வெளியே வந்து யாக்கோபு, யோவானுடன் சீமோன், அந்திரேயா ஆகியோரின் வீட்டிற்குள் சென்றார்கள். சீமோனுடைய மாமியார் காய்ச்சலாய்க் கிடந்தார். உடனே அவர்கள் அதைப் பற்றி இயேசுவிடம் சொன்னார்கள். இயேசு அவரருகில் சென்று கையைப் பிடித்து அவரைத் தூக்கினார். காய்ச்சல் அவரை விட்டு நீங்கிற்று. அவர் அவர்களுக்குப் பணிவிடை செய்தார். மாலை வேளையில், கதிரவன் மறையும் நேரத்தில் நோயாளர்கள், பேய்பிடித்தவர்கள் அனைவரையும் மக்கள் அவரிடம் கொண்டுவந்தார்கள். நகர் முழுவதும் வீட்டு வாயில்முன் கூடியிருந்தது. பல்வேறு பிணிகளால் வருந்திய பலரை அவர் குணப்படுத்தினார். பல பேய்களையும் ஓட்டினார் அந்தப் பேய்கள் அவரை அறிந்திருந்ததால் அவற்றை அவர் பேசவிடவில்லை. இயேசு விடியற்காலைக் கருக்கலில் எழுந்து தனிமையான ஓர் இடத்திற்குப் புறப்பட்டுச் சென்றார். அங்கே அவர் இறைவனிடம் வேண்டிக் கொண்டிருந்தார். சீமோனும் அவருடன் இருந்தவர்களும் அவரைத் தேடிச் சென்றார்கள். அவரைக் கண்டதும், ”எல்லாரும் உம்மைத் தேடிக்கொண்டி ருக்கிறார்கள்” என்றார்கள். அதற்கு அவர், ”நாம் அடுத்த ஊர்களுக்குப் போவோம், வாருங்கள். அங்கும் நான் நற்செய்தியைப் பறைசாற்ற வேண்டும் ஏனெனில் இதற்காகவே நான் வந்திருக்கிறேன்” என்று சொன்னார். பின்பு அவர் கலிலேய நாடுமுழுவதும் சென்று அவர்களுடைய தொழுகைக் கூடங்களில் நற்செய்தியைப் பறைசாற்றி பேய்களை ஓட்டி வந்தார்

**தியானம்:** இன்றைய நற்செய்தியை நாம் பார்க்கும் போது இயேசு மக்களைத் தேடி சென்று இறையாட்சி பற்றிய நற்செய்தியை அவர்களுக்கு அறிவிக்கின்றார், அதே வேளையில் இயேசு தம்மோடு தொடர்ந்து இருக்கவேண்டும் என்று மக்கள் விரும்பியது உண்டு, எனவே தான் சீடர்கள் இயேசுவிடம் சென்று ‘எல்லோரும் உம்மைத் தேடிக்கொண்டு இருக்கின்றார்கள்’ என்று கூறினார்கள். ஆனால் இயேசு சில மனிதர்களை மனமாற்றம் அடைய செய்தால் போதும் என்றோ, அவர்களுக்கு மட்டும் நற்செய்தி அறிவித்தால் மட்டும் போதும் என்றோ நினைக்கவில்லை, அவர் மேலும் பல ஊர்களுக்கு செல்லவேண்டும், மேலும் பல மக்களைச் சென்றடைய வேண்டும் என்கின்ற ஆர்வத்தினால் தம் சீடர்களிடம் அவர் “ நாம் அடுத்த ஊர்களுக்கு போவோம்” என்றார். இயேசு பல ஊர்களுக்கு சென்று போதித்தபோதிலும் அவருடைய நடமாட்டம் கலிலேயா பகுதியிலும் எருசலேம் பகுதியிலும் மட்டுமே நிகழ்ந்தது. இயேசுவின் பணியைத் தொடர்ந்து அனைத்துலக மக்களுக்கும் நற்செய்தியை அறிவிக்கின்ற பொறுப்பு அவருடைய சீடர்களிடம் ஒப்படைக்கப்பட்டது. நாம் இயேசுவின் உடலாக இருக்கின்றோம் என பவுல் அறிவுறுத்துகின்றார், இத்தகைய உணர்வால் உந்தப்பட்டு பவுல் போன்ற திருத்தூதர்கள் இயேசுவின் நற்செய்தியை அறிவிக்க புறப்பட்டுப்போனார்கள். இயேசு ஊர் ஊராக சென்று போதித்த பணி இன்றும் தொடர்கின்றது, நற்செய்தியை பறைசாற்றுவோர் .இயேசுவைப் பின்பற்றி “அடுத்த ஊர்களுக்கும்” போவதற்கு அழைக்கப்படுகின்றார்கள், வெவ்வேறு மக்களையும் அணுகி அவர்களையும் இறையாட்சியில் கொண்டு வர நாமும் முயல வேண்டும் என்பதை இயேசுவின் பணி நமக்கு உணர்த்துகின்றது. நாமும் இறைபணி செய்யும் தூர்தர்களாக மாறிட வரம் தாரும் இயேசுவே ஆமென்.